# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.14240/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 23.09.2009.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு R.சரவணன்,<br>எண்.8/15, ரேஸ் கோர்ஸ் ரோடு,<br>மடுவின்கரை,<br>கிண்டி,<br>சென்னை – 600 032. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>மைலாப்பூர் – திருவல்லிக்கேணி வட்டம்,<br>சென்னை – 600 028. |

*****

மனுதாரர் திரு R.சரவணன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு A.L.கோபி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், மைலாப்பூர் – திருவல்லிக்கேணி வட்டம், சென்னை இன்று (23.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 12.03.2009 அன்று வட்டாட்சியர், மைலாப்பூர் – திருவல்லிக்கேணி வட்டம், சென்னை அவர்களிடம் வயது முதிர்வு காரணமாக ஓய்வுபெற்ற தனது தந்தையாரின் ஓய்வூதியம் குறித்த சில தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளார். தகவல் பெறாததால் 30.04.2009 அன்று துறைக்கு மேல் முறையீடும் 23.06.2009 அன்று ஆணையத்திற்கு மேல்

முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (23.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் கோரிய தகவல்கள் 17.09.2009 அன்று அளிக்கப்பட்டதாகப் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். கால தாமதம் குறித்துக் கேட்ட போது மனுதாரரின் தந்தையார் பணிக்காலத்தில் முன் அறிவிப்பின்றி அடிக்கடி விடுப்பு எடுப்பது வழக்கம் என்றும், பணி வரன்முறை செய்யப்படாத நிலையில் அன்னாருக்கு 10 காலமுறை உயர்வுகள், 2 ஊதியக் கமிஷன் ஊதிய உயர்வுகள் கணக்கிட்டு அளிக்கப்பட வேண்டுமெனவும், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தால் குடும்பம் அவதியுறும் என்பதனால் கருணை அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்காமல் விடப்பட்டதாகவும், தற்போது பணிப் பதிவேட்டை மனுதாரரின் தந்தையார் வாங்கிச் சென்றிருப்பதாகவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். உரிய தகவல்கள் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளதால் வழக்கு இத்துடன் முடிவடைகின்றது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.14240/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மைலாப்பூர் – திருவல்லிக்கேணி வட்டம்,
சென்னை – 600 028.

திரு R.சரவணன்,
எண்.8/15, ரேஸ் கோர்ஸ் ரோடு,
மடுவின்கரை,
கிண்டி, சென்னை – 600 032.

*"ptl"*